بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 31/01/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஸீ கரத் போர், நஜ்தை நோக்கி செய்யப்பட்ட ஹஸ்ரத் அப்பான் பின் சயீது (ரலி) அவர்களின் படையெடுப்பு மற்றும் ஃகைபர் போர் ஆகியவற்றை முன்னிறுத்தி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த ஜுமுஆவில் ‘ஸீ கரத்’ போர் பற்றி கூறப்பட்டு வந்தது. அது குறித்து இவ்வாறு கூறப்பட்டிருந்தது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தப் போருக்கு செல்வதற்கு முன்பு சஹாபா சிலரை எதிரிகள் பக்கம் அனுப்பி வைத்திருந்தார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்குப் பின்னால் தமது படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். இது தொடர்பாக மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சஹாபா பெருமக்களும் வந்தபோது, எதிரி படையினர் அவர்களைப் பார்த்ததும் ஓடிப் போய் விட்டனர். முஸ்லிம்கள் எதிரிகள் முகாமிட்டிருந்த இடத்தை அடைந்தபோது, ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்களின் குதிரை அங்கு இருந்தது. அதன் கால்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. சஹாபி ஒருவர், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} அபூ கத்தாதா அவர்களின் குதிரைக்கோ கால்கள் துண்டிக்கப்பட்டுள்ளனவே!’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதற்கு அருகில் நின்றார்கள். ‘உனக்கு நன்மை உண்டாகட்டும்! போரில் உனக்கு எவ்வளவு எதிரிகள் இருக்கிறார்கள்’ என்று இரண்டு முறை கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் சஹாபாவும் முன்னால் சென்று இறுதியில், ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்களும் மஸ்அதாவும் மல்யுத்தம் செய்த இடத்தை அடைந்தார்கள். (இது பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தது.) அப்போது அவர்கள் ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் போர்வையில் சுற்றப்பட்டுள்ளார்கள் என்று நினைத்தார்கள். சஹாபி ஒருவர், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} அபூ கத்தாதா அவர்கள் ஷஹீது ஆகி விட்டதாகத் தெரிகிறது’ என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் அபூ கத்தாதா மீது கருணை புரிவானாக! எனக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக! அபூ கத்தாதாவோ எதிரிகளை விரட்டிச் சென்று கொண்டிருக்கிறார். மேலும், புகழ் பாடிக் கொண்டிருக்கிறார்' என்று கூறினார்கள்.** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் விரைவாக முன்னால் சென்று போர்வையை விலக்கியதும் மஸ்அதாவின் முகத்தைக் கண்டார்கள். இவர்கள் இருவரும், 'அல்லாஹ் அக்பர்! அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையைக் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} இது மஸ்அதா' என்று கூறினார்கள். இதனால் சஹாபாவும் தக்பீர் கூறினார்கள்.

பிறகு, சிறிது நேரத்திற்குப் பிறகே, ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் ஒட்டகங்களை ஓட்டியவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்திற்கு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அபூ கத்தாதாவே உமது முகம் வெற்றி பெற்று விட்டது. அபூ கத்தாதா குதிரை வீரர்களின் தலைவர் ஆவார். அபூ கத்தாதாவே! அல்லாஹ் உம்மிடம் பரக்கத்தை வைத்து விடுவானாக!' என்று கூறினார்கள். மற்றோர் அறிவிப்பில் இருக்கிறது, உம் சந்ததிகள் மற்றும் சந்ததிகளின் சந்ததிகளில் பரக்கத்தை வைத்து விடுவானாக.

பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அபூ கத்தாதாவே! இது உமது முகத்தில் என்னாயிற்று?' என்று கேட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: "என் தாய் தந்தையர் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! என் மீது ஓர் அம்பு பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக! நான் அந்த அம்பை எடுத்து விட்டதாக நினைத்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள், 'அபூ கத்தாதாவே! என் அருகில் வா' என்று கூறினார்கள். **பெருமானார் (ஸல்) அவர்கள் மென்மையாக அம்பை எடுத்து விட்டார்கள். மேலும், தமது அருளுக்குரிய உமிழ்நீரை வைத்தார்கள். பிறகு, தமது கையை அதன் மீது வைத்தார்கள்." அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் வழங்கியவன் மீது ஆணையாக! எனக்கு எந்த அடியும் படாதது போன்றும், காயமும் ஏற்படாதது போன்றும் தோன்றியது.**

ஓர் அறிவிப்பில் இருக்கிறது, **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ கத்தாதா அவர்களைப் பார்த்ததும், 'அல்லாஹ்வே! இவரது முடியிலும் தோலிலும் பரக்கத் வைத்து விடுவாயாக' என்று கூறினார்கள். மேலும், 'உமது முகம் வெற்றி பெற்று விட்டது' என்றும் கூறினார்கள்.** அவர்கள் கூறுகிறார்கள்: நான், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} தங்களது முகம் வெற்றி பெற்று விட்டது' என்று பணிவுடன் கூறினேன். பிறகு, **எழுபது வயதில் ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் வஃபாத் ஆனபோது, அப்பொழுதும் அவர்கள் முகத்தால் 15 வயது உள்ளவர் போன்று தெரிந்தார்கள்** என்று கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 'ஸூல் கரத்' எனும் இடத்தை அடைந்தது பற்றி கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் சலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஷா நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். நான் எதிரிகளைத் தடுத்து நிறுத்திய அந்த நீரூற்றில் முகாமிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒட்டகங்களையும் நான் எதிரிகளிடமிருந்து பறித்துக் கொண்டிருந்த அனைத்தையும் ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் எதிரிகளிடமிருந்து பறிக்கப்பட்ட ஒட்டகங்களிலிருந்து ஓர் ஒட்டகத்தை அறுத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக அதன் ஈரலையும் கூம்பையும் நெருப்பில் சுட்டார்கள். ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்கள் பேரீத்தம் பழங்களை சுமந்திருக்கும் 10 ஒட்டகங்களை அனுப்பினார்கள். அது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸூல் கரதில் கிடைத்தது.

ஹஸ்ரத் சலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான், 'எதிரிகளை அவர்கள் தாகமாக இருக்கும் போது, தண்ணீரை விட்டும் தடுத்திருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னைப் போர்வீரர்கள் 100 பேருடன் அனுப்பி வையுங்கள். நான் அவர்களைத் துரத்திச் சென்று அவர்களின் தகவல் தெரிவிப்பவர் ஒவ்வொருவரையும்கூட கொன்று விடுகிறேன்' என்று பணிவுடன் கூறினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரிக்கத் துவங்கினார்கள். எதுவரை என்றால், நெருப்பின் வெளிச்சத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பற்கள் தென்பட ஆரம்பித்தன. அன்னார், 'சலமாவே! உம்மால் இப்படி செய்ய முடியுமா?' என்று கேட்டார்கள். அதற்கு நான், தங்களுக்கு கண்ணியம் வழங்கியவன் மீது ஆணையாக! ஆமாம், முடியும்' என்று கூறினேன்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'ملَكتَ فاَسجِع فاسجع அதாவது, நீர் அவர்கள் மீது ஆதிக்கம் பெற்று விட்டால், மென்மையாக நடந்து கொள்வீராக!' என்று கூறினார்கள். இது அரேபியாவின் பழமொழிகளில் ஒரு பழமொழியாகும். அதன் பொருள், மென்மையாக நடந்து கொண்டு, கடுமை காட்டாமல் இருப்பதே சிறந்த மன்னிப்பாகும் என்பதாகும்.**

இந்தப் போருக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புதன்கிழமை காலை புறப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எதிரிகளைப் பற்றிய செய்தி எதுவும் தெரியும் பொருட்டு ஓர் இரவும், ஒரு பகலும் ஸூல் கரத் எனும் இடத்தில் தங்கினார்கள். பிறகு, திங்கள்கிழமை அன்று மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் ஐந்து இரவுகள் மதீனாவை விட்டு வெளியே இருந்தார்கள்.

இப்பொழுது ஒரு படையெடுப்புப் பற்றி கூறுவேன். இது நஜ்தை நோக்கிச் சென்ற ஹஸ்ரத் அப்பான் பின் சயீத் அவர்களது படையெடுப்பு

ஆகும். இந்தப் படையெடுப்பு ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம் நடைபெற்றது. ஆனால், ஓர் அறிவிப்பில் இதன் தேதி ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு ஜமாதிஸ் ஸானீ என்று கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களும் இதை ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் நிகழ்ந்தாக எழுதியுள்ளார்கள். அது அதிகம் ஏற்புடையதாக இருக்கிறது.

ஹஸ்ரத் அப்பான் (ரலி) அவர்களின் தந்தை குறைஷியர்களின் பெரிய மக்களில் ஒருவராக இருந்தார். இவர்களின் சகோதரர்களான அம்ரும், ஃஹாலிதும் முதலில் முஸ்லிமாகி விட்டார்கள். இவர்கள் ஹிஜ்ரீ 13 ஆம் ஆண்டு ஷஹீதானார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹிஜ்ரீ 27 ஆம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் வஃபாத் ஆனார்கள்.

இந்தப் படையெடுப்பைப் பற்றி சஹீஹ் புகாரியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பான் (ரலி) அவர்களை ஒரு படையெடுப்பில் நியமித்து மதீனாவிலிருந்து நஜ்தை நோக்கி அனுப்பினார்கள். ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஃஹைபரை வெற்றி கொண்ட பிறகு, அப்பான் அவர்களும் அவர்களுடன் இருந்தவர்களும் ஃஹைபருக்கு வந்தார்கள்.

பிறகு, **ஒரு பிரசித்த பெற்ற போரைப் பற்றிய குறிப்பு வரலாற்றில் கிடைக்கிறது. அது ஃஹைபர் போர் என்று அழைக்கப்படுகிறது.** ஃஹைபர் ஒரு பரந்து விரிந்த பச்சைப்பசேலான பகுதியாகும். அது நீருற்றுகள் மற்றும் அதிகமான நீர்மட்டங்களால் செழித்து இருந்தது. அரேபிய தீபகற்பத்தில் மிகப் பெரிய பேரீத்தம் பழத் தோப்புகளில் ஒன்றாக கணக்கிடப்படுகிறது. வரலாற்று அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் இருந்து இங்கு இஸ்ரவேலர்களின் யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள். இன்னும் சில அறிவிப்புகளும் உள்ளன. அவற்றிலிருந்து ஃஹைபரில் தொன்று தொட்டே பெரும் பெரும் கோட்டைகளைக் கட்டி யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற முடிவு கிடைக்கிறது. எபிரேய மொழியில் ஃஹைபர் என்றாலும், கோட்டை என்றுதான் பொருள். யூதர்களின் சில கோத்திரங்கள் மதீனாவிலும் இருந்தனதான்; ஆனால், ஒரு விஷயம் ஃஹைபரின் யூதர்களைத் தனிச்சிறப்புப் பெற்றவர்களாக ஆக்கிக் காட்டியது. இங்கிருந்த யூதர்கள் வீரத்திலும் போரிலும் உறுதிப்பாட்டைக் காட்டுவதிலும் மற்ற யூதர்கள் அனைவரைவிடவும் மிகைத்திருந்தார்கள்.

மற்றவர்களைக் காட்டிலும் அவர்களிடம் ஒருவர் மற்றவருடன் ஒற்றுமையும் இருந்தது. இதனால் **இது அரேபிய தீபகற்பத்தில் ஆற்றல் மற்றும் பலத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் சமுதாயமாக இருந்தது.** மதீனாவின் யூதர்களாகட்டும் அல்லது ஃஹைபரின் யூதர்கள் ஆகட்டும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் குறித்தும், இஸ்லாத்தைக் குறித்தும் அவர்களுடைய சதித்திட்டங்களும் மறைவான சூழ்ச்சிகளும்

கிளர்ச்சி அளவு அதிகரித்திருந்தன. காழ்ப்புணர்ச்சியிலும், பகைமையிலும் அதிகரித்துக் கொண்டே சென்ற இந்த சமுதாயம் இஸ்லாத்தையும், மாநபி (ஸல்) அவர்களையும்கூட இல்லாமல் செய்வதில் தம்முடைய எல்லா ஆற்றல்களையும் பயன்பாட்டில் கொண்டு வருவதில் எந்தக் குறையும் விட்டு வைக்கவில்லை.

மதீனாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட பிறகு, மதீனாவின் யூதர்களின் ஒரு எண்ணிக்கை ஃஹைபருக்குச் சென்று குடியமர்ந்து விட்டது. ஆனால், ஏற்கனவே மிகப்பெரிய ஒரு போர் ஆற்றலாக இருந்த ஃஹைபர் இப்பொழுது முஸ்லிம்களுக்கு எதிராக பயங்கரமான சதித்திட்டங்கள் தீட்டுவதற்கான தலைமையகமாகி விட்டது. ஆக, கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் இறைவனின் கை அசைவுக்குக் கட்டுப்பட்டு, ஃஹைபரை நோக்கி தாம் முந்திச் செல்ல வேண்டுமென முடிவெடுத்தார்கள் என்பதுதான் அந்தக் குறிப்பான பின்னணியாக இருந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அடிப்படையில் ஹுதைபியா சமரச உடன்படிக்கை ஒரு மிகப் பெரும் வெற்றியாக இருந்தது. திருக்குர்ஆன் இதை ஒரு மாபெரும் வெற்றியாகக் கூறியுள்ளது.** அது குறித்து إِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِينًا என்று கூறியுள்ளது: அதாவது, "நிச்சயமாக நாம் உமக்குத் தெள்ளத்தெளிவான ஒரு வெற்றியை வழங்கியுள்ளோம்." தெள்ளத்தெளிவான வெற்றிக்கான இந்த வாசல் வழியாக சென்றவாறே ஃஹைபர் மற்றும் மக்கா போன்ற மகத்துவமிக்க வெற்றிகள் கிடைத்தன. **உண்மையில், ஹுதைபியா சமரச உடன்படிக்கைக்குப் பிறகு திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, மக்காவும் மதீனாவுக்கும் இடையில் சூரா ஃபத்ஹ் இறங்கிய போதே அல்லாஹ் ஃஹைபர் வெற்றிக்கான வாக்குறுதி அளித்து விட்டிருந்தான்.**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஃஹைபரை நோக்கி செல்வதற்காக அறிவிப்பு செய்ய வைத்தபோது, ஹுதைபியா சமரச உடன்படிக்கையில் இணைந்திருந்தவர்கள் மட்டுமே உடன் செல்ல வேண்டும் என்று அறிவிக்கச் செய்தார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: போர்ச் செல்வத்துக்காகப் புறப்படுபவர்கள் என்னுடன் புறப்பட வேண்டாம். ஜிஹாதில் மட்டும் ஆர்வமுள்ளவர்கள் என்னுடன் புறப்படட்டும்.

அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்களும், இப்னு சஅத் அவர்களும் கூறுகிறார்கள்: **முதன்முதலாக ஃஹைபர் போரில்தான் பெரிய கொடியைப் பற்றிய குறிப்பு கிடைக்கிறது**. அதற்கு முன்னால் சின்ன சின்னக் கொடிகள்தான் இருந்து வந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெரிய கொடி கருப்பு நிறத்தில் இருந்தது. அது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய போர்வையால் செய்யப்பட்டிருந்தது. அதன் பெயர் உக்காப்

ஆகும். அறிவிப்பில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் ஒரு பெரிய கொடி வழங்கப்பட்டதாகக் குறிப்பு கிடைக்கிறது. ஆனால், அந்தப் பெரிய கொடி ஃகைபரில் வழங்கப்பட்டது.

**இந்தப் பயணத்தில் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப சஹாபியாக்கள் ஆறு ஏழு பேரும்கூட இந்தப் போர்த்திட்டத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இணைந்து கொண்டார்கள். ஆனால், மற்றோர் அறிவிப்புக்கு ஏற்ப, சஹாபியாக்கள் 20 பேர் இந்தப் போரில் கலந்து கொண்டார்கள்.**

ஃகைபரின் யூதர்களுக்கு முஸ்லிம்களின் படை பற்றி தெரிய வந்ததும், அவர்கள் ஒரு குழுவை ஆயத்தம் செய்து அக்கம்பக்கத்து போர்புரியும் வீரக் கோத்திரங்களை நோக்கி, அவர்களிடம் இராணுவ உதவிக்கான விண்ணப்பம் வைப்பதற்காக அனுப்பினார்கள். முர்ரஹ் கோத்திரம் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டவாறு, உதவி செய்ய மறுத்து விட்டது. எனினும், பனு அஸத் மற்றும் பனு ஃகத்ஃபான் போன்ற போர் புரியும் கோத்திரங்கள் ஆயுதமேந்திய போர்வீரர்களை உள்ளடக்கிய படையைக் கொண்டு உதவ ஆயத்தமாகி விட்டார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:* **இன்னும் இதன் விபரம் உள்ளது. அதை இனி எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ்.**

*குத்பா சானியாவுக்கு முன்பு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மதிப்பிற்குரிய முஹம்மத் பஃஹ்ஷ் சாஹிப் அவர்களின் மகன் மண்டி பஹாவுத்தீனைச் சேர்ந்த* ***மதிப்பிற்குரிய முஹம்மத் அஷ்ரஃப் சாஹிப்*** *அவர்கள், முஹம்மத் ஹபீப் ஷாத்ரீ சாஹிப் அவர்களின் மகன் கென்யாவின் இரண்டாம் நாயிப் அமீர்* ***மதிப்பிற்குரிய ஹபீப் முஹம்மத் ஷாத்ரீ சாஹிப் அவர்கள்*** *மற்றும்* ***ஜிம்பாப்வேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அனோங்கி மதோங்கோ சாஹிப்*** *ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு இவர்களின் ஜனாஸா காயிப் தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்கள் அனைவரின் பாவமன்னிப்புக்காகவும், அந்தஸத்தின் உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)